| O.S.No. 236/2017 | PW1: திரு. ராமசாமி நாடார்<br>த/பெ. திரு. குருசாமி நாடார் | 18-06-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எதற்காக வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் 56 x 61 அடி சொத்திற்காக வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்தை யாரிடமிருந்து வாங்கினீர்கள் என்றால் பெரியப்பகவுண்டரின் வாரிசுகளிடமிருந்து வாங்கினேன். மேற்படி வழக்கு சொத்தை கிரையம் வாங்கும்போது நிலமாகதான் வாங்கினேன். நான் எவ்வளவு கிரையம் வாங்கினேன் என்றால் 1 ஏக்கர் 60 சென்ட் கிரையம் வாங்கினேன். 03.02.1986–ம் தேதியில் நான் கிரையம் வாங்கினேன். பின்னிட்டு, 05.02.1986–ல் எனது சகோதரர் துரை 1 ஏக்கர் 60 சென்ட் கிரையம் வாங்கினார். அதற்கு அடுத்ததாக எனது மற்றொரு சகோதரர் தனசேகர் 1 ஏக்கர் 65 சென்ட் கிரையம் வாங்கினார். நான், எனது சகோதரர் கிரையம் வாங்கிய 4 ஏக்கர் 85 சென்ட் போக மீதமுள்ள 5 சென்ட்டினை பத்மா, பிரேமா ஆகியோர் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

2. 03.02.1986–க்கு பின்னிட்டு தாவா சர்வே எண்ணில் வேறு ஏதேனும் சொத்து கிரையம் வாங்கினீர்களா என்றால் என் தம்பி துரையிடம் 24 சென்ட்டினை கிரையம் வாங்கினேன். மேற்படி 24 சென்ட்டினை எந்த ஆண்டு கிரையம் வாங்கினேன் என்று ஞாபகமில்லை. அவ்வாறு என் தம்பியிடம் கிரையம் வாங்கியதற்கு கிரைய பத்திரம் எழுதி வாங்கினேன். மேற்படி என் தம்பி துரையிடம் கிரையம் வாங்கிய 24 சென்ட்டினை வழக்கில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன்.

3. நான் என் தம்பியிடம் 24 சென்ட் கிரையம் வாங்குவதற்கு முன்பாக நான் ஏற்கனவே கிரையம் வாங்கிய 1 ஏக்கர் 60 சென்ட்டினை மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்யவில்லை, கிரையம் வாங்கிய

பிறகுதான் விற்பனை செய்தேன். மனைப்பிரிவுகளுக்கு என்ன பெயர் வைத்தீர்கள் என்றால் ராஜகணபதி நகர் என்று வைத்தோம். எத்தனை மனைப்பிரிவுகளாக போட்டீர்கள் என்றால் 45 மனைப்பிரிவுகள் போட்டோம். அவ்வாறான மனைப்பிரிவுகளில் சுப்பிரமணிய முதலியார் ஸ்ரீதருக்கு 2002-ம் வருடம் மனை எண். 4-ஐ விற்பனை செய்தோன். 2002-ம் ஆண்டு சுப்பிரமணி என்பவருக்கு மனை எண்.3-ஐ விற்பனை செய்தேன் என்றால் பெயர் ஞாபகமில்லை. 2002-ம் ஆண்டு 2 மனைப்பிரிவுகளை நான் விற்பனை செய்தேன்.

4. நான் என் தம்பியிடம் 24 சென்ட்டினை வாங்கிய பிறகு மேற்படி 2 மனைப்பிரிவுகளை விற்பனை செய்தீர்களே அல்லது அதற்கு முன்பாகவே விற்பனை செய்தீர்களா என்றால் தற்போது ஞாபகமில்லை. மேற்படி மனைப்பிரிவுகளுக்கு திருவத்திபுரம் நகராட்சியில் அங்கீகாரம் பெற்றேன். அவ்வாறு அங்கீகாரம் பெற்ற விஷயத்தை பிராதில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

5. எனது தம்பி துரை வாங்கிய இடத்தில் மனைப்பிரிவுகளாக பிரித்து பாரதி நகர் என்ற பெயர் வைத்து விற்பனை செய்தார். எனது மற்றொரு தம்பி தனசேசகரன் வாங்கிய சொத்தினை மனைப்பிரிவுகளாக பிரித்து GT நகர் என்ற பெயர் வைத்து விற்பனை செய்தார். அவரவர் வாங்கிய சொத்துக்களை மனைப்பிரிவுளாக பிரித்து விற்பனை செய்தோம். மீதம் ஒரு சில மனைப்பிரிவுகள் விற்பனை செய்யாத நிலையில் உள்ளது. எனது தம்பி எனக்கு 24 சென்ட்டினை கிரையம் கொடுப்பதற்கு முன்பாகவே அவர் மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்து வந்தார் என்றால் அவ்வாறு இருக்கலாம்.

6. சதுர அடி என்று குறிப்பிட்டு மனைப்பிரிவுகளாக விற்பனை செய்துள்ள நிலையில் எதன் அடிப்படையில் என் தம்பியிடம் 24 சென்ட்டினை கிரையம் வாங்கினீர்கள் என்றால் 1 சதுர அடி 100 ரூபாய் என விலை நிர்ணயம் செய்து கிரையம் வாங்கினேன். அந்த கிரைய பத்திரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணம்தான் என் தம்பியிடம் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் ஆகும். அந்த கிரைய ஆவணம் 02-01-2003 அன்று ஏற்பட்டதாக உள்ளது. என் தம்பி துரை கிரையம் வாங்கிய சொத்தில் 24 சென்ட்டினை மேற்கு பக்கமாக எனக்கு கொடுத்தார். அதன் ஜக்குபபந்தி நான் போட்ட மனைக்கு கிழக்கு, நான் கிரையம் பெற்ற மனைக்கு தெற்கு, நான் விற்று வரும் மனைக்கு மேற்கு, நகராட்சி தெருவிற்கு வடக்கு, குளத்திற்கு தெற்கு, இதன் மத்தியில் 10,464 சதுர அடி காலி மனை நகராட்சி plan படி எழுதப்பட்டுள்ளது என்று உள்ளது.

7. நான் எனது வழக்குரையில் 45 மனைப்பிரிவுகள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 45 மனைப்பிரிவுகள் நான் வாங்கிய 1 ஏக்கர் 60 சென்ட்டில் ஏற்படுத்தப்பட்டதா அல்லது நான் என் தம்பியிடம் கிரையம் வாங்கிய 24 சென்ட்டையும் சேர்த்து 1 ஏக்கர் 84 சென்ட்டில் ஏற்படுத்தப்பட்டதா என்றால் 1 ஏக்கர் 84 சென்ட்டில் மேற்படி மனைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டது. 2002-ம் ஆண்டு ஸ்ரீதர், சுந்தரமூர்த்தித ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த மனை எண். 3 மற்றும் 4 -ல் சொத்து விவரத்தில் எனக்கு சொந்தமான 1 ஏக்கர் 60 சென்ட் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா அல்லது 1 ஏக்கர் 84 சென்ட் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நானும் என் சகோதரரும் ஏற்கனவே ஒரு

ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம், அதன் அடிப்படையில் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தோம். மேற்படி ஒப்பந்தத்தினை நகராட்சியிடம் அங்கீகாரம் பெறுவதற்கு 6 மாதத்திற்கு முன்னர் ஏற்படுத்திக்கொண்டோம்.

8. என் தம்பி துரை ஏற்படுத்திய மனைப்பிரிவுக்கு பாரதி நகர் என்று நகராட்சியினர் அனுமதி வழங்கினர். எனது தம்பி எனக்கு 24 சென்ட் கொடுத்தது போக 1 ஏக்கர் 36 சென்ட்டில்தான் அவர் மனைப்பிரிவு போட்டிருக்கவேண்டும் என்றால் சரிதான், ஆனால் எனது தம்பி துரை என்பவர் மற்றொரு தம்பி தனசேகர் என்பவரிடம் ஒப்பந்தத்தின்பேரில் 10 சென்ட்டினை பெற்று 1 ஏக்கர் 46 சென்ட்டில் மனைப்பிரிவு அமைத்தார். எனது சகோதரர் தனசேகர் வாங்கிய 1 ஏக்கர் 65 சென்ட்டில் 10 சென்ட்டினை துரைக்கு கொடுத்திருந்தால் 1 ஏக்கர் 55 சென்ட்டில்தான் GT நகர் என்ற மனைப்பிரிவுகள் ஏற்படுத்தியிருக்க முடியும் என்றால் சரிதான். எனது சகோதரரும் நானும் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தினை மீறி அளவுகள் அதிகமாக மனைப்பிரிவுகள் போட்டிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான். மேலும், 4 ஏக்கர் 85 சென்ட்டிற்கு மேல் நானும் என் சகோதரர்களும் மனைப்பிரிவுகள் அமைத்திருந்தால் அது தவறு, மேற்படி 5 சென்ட்டினை கொடுத்ததை அப்போதே உட்பிரிவு செய்யப்பட்டது.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**